
# திருநாட்டியத்தான்குடி தல வரலாறு

197
2.57
197
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1957
MADRAS
C



Q23:38.2N93TH
N56
97305

...புரீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

உ

திருநாட்டியத்தான்குடி தேவஸ்தான வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1957
MADRAS

# திருநாட்டியத்தான்குடி தலவரலாறு

தொகுத்தெழுதியவர்:
திரு. ப. இராமனாத பிள்ளை,
தமிழாசிரியர்
மன்னார்குடி.

திரு. KM. KR. SM. அருணாசலம் செட்டியார் அவர்கள்,
டிரஸ்டி.

திருநாட்டியத்தான்குடி
25—3—1956

A. A. வெங்கடாசலம் B. A.
நிர்வாக அதிகாரி.

( விலை அணா ஒன்று )

## இந்து அற நிலைய பாதுகாப்புக் கழகம்
## சென்னை

ஆணையாளர் :

திரு. A. உத்தண்டராம பிள்ளை I. A. S. அவர்கள்

97305.

துணை ஆணையாளர் :

திரு. A. சர்க்கரை சேர்வை B. A. B. L. அவர்கள்

Q23 :38.21193.74
N56

உதவி ஆணையாளர் :

திரு. B. இரங்காச்சாரி அவர்கள்

இன்ஸ்பெக்டர் :

திரு. S. இராமசாமி அவர்கள்

(மன்னார்குடி டிவிசன்)

சிவமயம்

# முன்னுரை.

சிவமணங் கமழும் சிவனடியார்கள் பரவும் சிவதலங்கள் பூமியில் எண்ணிறந்தன. அவற்றுள் ஆயிரத்தெட்டு தலங்கள் முன்னர் விளங்கின. சைவ சமயாசாரியர்களால் தேவாரம் பெற்ற தலங்களில் தற்போது நமக்குக் கிடைத்துள்ள தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கு. இவைகளில் சோழநாட்டில் நூற்றுத்தொண்ணூறு தலங்கள் உள்ளன.

காவிரிக்குத் தென்கரையில் விளங்கும் தலங்களுள் திருநாட்டியத்தான்குடி ஒரு சிறந்த சிவதலமாம். இங்கே கோட்புலி நாயனர் எனும் சிவனடியார் திருவவதாரம் செய்து செயற்கருஞ் செய்கை செய்து சிவபெருமானது திருக் காட்சியைத் தெரிசித்து, சிவபதம் பெற்றனர்.

சைவ சமயாசாரியர்களில் தம்பிரான் தோழராகிய சுந்தர மூர்த்தி நாயனருக்கு வயலிலே சிவபெருமானும் பார்வதி தேவியாரும் நாத்துப் பரித்து நடவு நட்டுக் காட்சி தந்து தேவாரம் பெற்ற சிறந்த தலமுமாகும்.

இத்தகைய தல வரலாற்றை எழுதும்படி பணித்த அற நிலையப் பாதுகாப்பாளர் அவர்கட்கும், நிர்வாக அதிகாரி அவர்கட்கும் எனது நன்றிகலந்த வணக்கம்.

அடியேன் ஒருவகையானும் தகுதியற்றவனாயினும் சிவ சம்பந்தமுடைய நூலானதுபற்றி அறிவுடையோர் குற்றம் பொறுத்துக் குணமே காணுவர் என்னும் துணிவுடையேன்.

இந்நூல் வெளிவரத் தோன்றாத் துணையாயிருந்தருள் செயும் நாட்டியத்தான்குடி நம்பியை நம்பிப் பணியும்

மன்னார்குடி
16-5-53.

(Sd) ப. இராமனாதன்,
தமிழாசிரியன்.

உ

சிவமயம்.

# திருநாட்டியத்தான்குடி வரலாறு

## தல அமைப்பு.

தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூக்காவி லுள்ள திருநாட்டியத்தான்குடி கிராமம், தென் பிராந்திய இருப்புப்பாதையில் மாயவரம்—காரைக் குடி வழியில் திருவாரூருக்குத் தென்பால் 'மாவூர் ரோடு' எனும் நிலையத்திலிருந்து மேற்கே கப்பி ரோட்டில் $\frac{3}{4}$ மைலில் வெள்ளையாற்றின் தென்கரை யில் உள்ளது.

ஆறு :- வெள்ளையாறு.

தீர்த்தம் :- கோவிலின் முன்புறம்—சூரிய தீர்த்தம்
பின்புறம்—கரிதீர்த்தம்.

ஸ்வாமி பெயர் :-
1. ஸ்ரீ ரத்னபுரீஸ்வரர்.
2. ஸ்ரீ கரிநாலேஸ்வரர்.
3. ஸ்ரீ நாட்டியத்தான்குடி நம்பி
4. ஸ்ரீ மாணிக்க வண்ணர்.
(தேவாரப் பெயர்)
(கிழக்கு நோக்கிய சந்நிதி)

அம்மன் பெயர் :-
1. ஸ்ரீ மங்களாம்பாள்,
2. ஸ்ரீ மலைமகள் அம்மை.
(தேவாரப் பெயர்)
3. ஸ்ரீ மலர்மங்கை அம்மை.
(தெற்கு நோக்கிய சந்நிதி)

## மூர்த்திகளின் விபரம்.

கிழக்கோபுர வாயிலுக்கு முன் கிழக்கே மேற்கு நோக்கிய 'கைகாட்டி விநாயகர்' — நின்ற திருக்கோலம்.

கிழக்கு நோக்கிய சந்நிதி — மூலஸ்தானம் — ஸ்ரீ ரெத்னபுரீஸ்வரர் — நாட்டியத்தான்குடி நம்பி.
மகாமண்டபம் — சிவகாமி சமேத நடராஜா.

உட்பிரகாரம் — கன்னிமூலை விநாயகர் —
சதுர்ப்புஜ சுப்ரமண்யம்-வள்ளி-தெய்வானை.
(முன் அண்ணாமலையார்)

விசுவநாதர் — விசாலாக்ஷி.
வாயுமூலை — கஜலெட்சுமி.
கோமுகியில் — பிரம்மா
வடக்கு முகமாக — மகிஷாசுரமர்த்தனி.
தெற்கு முகமாக — சண்டேசுரர்.
தெற்கு நோக்கிய சந்நிதி — மலர்மங்கை நாயகி.

| **ஈசான்ய மூலை.** | **உத்சவ மூர்த்திகள்** |
|---|---|
| பைரவர் | விநாயகர் |
| மாரியம்மன் | சந்திரசேகரர் |
| நால்வர் | சுப்ரமண்யம் - வள்ளி - தெய்வானை. |
| கோட்புலி நாயனர் | சண்டேசர் |
| சனீஸ்வரர் | பிரதோஷ நாயர் |
| சந்திரன் | நால்வர் |
| சூரியன் | கோட்புலி நாயனர் |
| | நடராஜர் - சிவகாம சுந்தரி. |

**ஸ்தலவிருக்ஷம் - மாவலிங்கம்**

## சைவ சமயாச்சாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபட்டுத் தேவாரம் திருவாய் மலர்ந்தருளிய வரலாறு

திருவாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளது பெருமையையும் அற்புதாதிசயங்களையும் கேட்டு மகிழ்ந்த கோட்புலிநாயனர் திருவாரூர் சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கி தமது ஊராகிய திருநாட்டித்தான்குடிக்கு எழுந்தருளுமாறு விண்ணப்பித்துக்கொண்டார். சுந்தரரும் இசைந்து திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளினர்.

கோட்புலிநாயனர் நகரை அலங்கரித்து பல வகையான மரியாதையுடன் எதிர்கொண்டு வணங்கி தம் மனைக்கு எழுந்தருளச் செய்து பாதம் துளக்கி அருச்சித்து மகேசுர பூசையும் செய்து மகிழ்ந்து இருவரும் அளவளாவி யிருந்தனர்,

கோட்புலி நாயனர் தமது இரு கண்ணனைய அருந்தவப்புதல்விகளாகிய சிங்கடியாரையும்,வனப்பகையாரையும் சுந்தரரைத் தொழச்செய்து தாமும் தொழுது இவ்விருவரையும் மனைவியராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகளோ அவர்களைத் தமது பெண்களாக பாவித்து மடியின்மேல் வைத்து உச்சிமோந்து வாழ்த்தியருளினர்.

பிறகு சிவதெரிசனம் செய்யப்புறப்பட்டு கோவில் சென்று ஈசனையும் அம்மையையும் காணது விநாயகரை வினவ, விஞயகர், அம்மையப்பன் சென்ற ஈசான்ய திக்கைக் கரங்காட்ட,அவண் நோக்கி, ஆங்கு உமாதேவியாரும் சிவபெருமானும் நடவுநட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு

"நட்ட நடாக்குறை நாளை நடலாம்
நாளை நடாக்குறை சேறு தங்கிடவே

நட்டதுபோதும் கரையேறி வாரும்
நாட்டியத் தான்குடி நம்பி"

என்றுபாட அம்மையப்பன் மறைந்து திருக்கோவிலுக்கு எழுந்தருளினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அம்மையப்பனை தெரிசிக்க கோவில் வாசலில் நுழையும்போது அப்பனின் ஆபரணமாகிய சர்ப்ப ரூபங்கொண்டு ஆண்டவன் வாசலில், நாயனர் உட்புக முடியாதபடி ரீங்காரம் செய்ய அதைக் கண்ட சுவாமிகள்,

"பூணுணுவதோர் அரவங் கண்டஞ்சேன்" என்று தொடங்கும் பாசுரங்கள் பத்தையும் பாட ஆண்டவன் சுய உருவங் காட்டி தெரிசனம் கொடுத்தார்.

பிறகு சிவாலயம் சென்று கோபுரத்தைத் தொழுது உள்ளே அன்பினல் உருகி உச்சி குவித்த கையினராய் ஆண்டவனை வணங்கினர். அதில் கோட்புலி நாயனரைச் சிறப்பித்துக் கடைப் பாட்டினல் தன்னைச் சிங்கடியப்படுகின்ற பாவனையாற்பாடி தன் அன்பை வெளிப்படுத்தினர்.

## தீர்த்தங்களின் விபரம்

பூர்வத்தில் யானை ஒன்று சிவபூஜை செய்து வழிபட்டுத் தன் பெயரால் திருக்கோவிலுக்கு மேற்கில் தீர்த்தமுண்டாக்கியது. அத்தீர்த்தம் கரி தீர்த்தம் என வழங்கும்.

சூரியன் பூஜித்து வழிபட்டு சூரிய புஷ்கரணி ஒன்று திருக்கோவிலுக்குக் கிழக்கே உண்டு பண்ணியதாம்.

புகலக ரிஷியும் எமகண்ட ரிஷியும் பூசித்து முக்தியடைந்தனர்.

## கோட்புலி நாயனுர் சரித்திரம்

சோழநாட்டில் விளங்கும் இந்தத் திருநாட்டியத் தான்குடியில் உத்தமமாகிய வேளாளர் குலத்திலே கோட்புலி நாயனுர் அவதரித்தார். இவர் சோழ ராஜனுக்கு சேனு மந்திரியாயிருந்து பல வேற்றரசர் களை வென்று புகழ்விளங்கச் சிவனடி மறவா சிந் தனையினராயிருந்தார். இப்படிப் பல போரிலும் வெற்றிபெற்று மீளுங்கால் அரசன் மகிழ்ந்தளிக் கும் நிதியெல்லாம் மதியணியும் சிவபெருமான் திருக்கோவில் திருவமுதுபடிக்காக நெல்லை வாங்கி மலைபோல சேர்கட்டிவைக்கும் திருப்பணியையே திருத்தொண்டாகச் செய்து வருவாராயினர்.

இப்படி வாழும் நாளில் அரசன் கட்டளைப்படி போருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அப்படிப் புறப்படுவதற்குமுன் சிவபூசைக்கு நிவேத்தியத் துக்கு முடைவராதபடி வேண்டிய நெல்லை சேக ரித்து வைத்து தம் முறவினரையெல்லாம் தனித் தனி யழைத்து, "இந்த நெற்சேர் சிவபெருமான் அமுதுக்காக சேகரிக்கப்பட்டது. இதை தமக் கென எடுத்துண்ண நினைத்தாலும் அவரை அழித்துவிடுவேன்" என்று சபதம் செய்துவிட்டுச் சென்ருர்.

அப்படி நாயனுர் போனபின் நாட்டில் பஞ்சம் வந்தது. சுற்றத்தார் உணவின்றி இறக்குந்தருவா யில் சிவாலய அமுதுபடிக்கான நெல்லை எடுத் துண்டு உயிர் பிழைத்துப் பிறகு திருப்பிக் கொடுத்துவிடுவோமென்று நினைத்து நெல்லை எடுத்து உணவாக்கி உண்டு உயிர் பிழைத்தார்கள்.

சில நாளில் பஞ்சம் நீங்கியது. நாயனரும் போரிலே வெற்றிபெற்று அரசரால் பல வெகுமதியும் பெற்று திருநாட்டியத்தான்குடி வந்து சேர்ந்தார். வந்து சேர்ந்தவர், தமது கட்டளையைமீறி சுற்றத்தார் நெல்லை யெடுத்துண்டதை அறிந்தும் அறியாதார் போலவிருந்தார். தம்மைக் காணவந்த சுற்றத்தாரை இனிய மொழியால் மகிழ்வித்து, தம் மனையில் வந்து தங்கி அவர்கட்கெல்லாம் பொன்னும் பட்டாடையும் அளிப்பதற்காக அழைத்துவர ஏவலாளரை ஏவினர். யாவரும் வந்து சேர்ந்தபின் "சிவபெருமான் ஆணையாகச் சொல்லிய கட்டளையையும் மீறி அமுதுபடி அழித்தவரைக் கொல்லாமல் விடுவேனே" என்று கோபப் பொறிபறக்கக் சொலைபுரிவாராயினர்.

தந்தை தாய் உடன் பிறந்தார் தாரங்கள் உறவினர் ஊரிலிருந்த அந்த நெல்லையுண்ண இசைந்தவர்கள் யாவரையும் விடாது, வாளால் வீசிக் கொன்று குவித்தார். இத்தனைக்கும் தப்பிப் பிழைத்த தாய்ப்பால் மணம் மாறாத ஒரு பிள்ளையையும் கொல்ல வாளோங்கியபோது தன்னுடைய சேவகன் "கோட்புலி" என்போன் "குழந்தை குடிக்கொரு பிள்ளையாதலாலும் இக்குழந்தை அன்ன முண்ணும் பருவம் வராதலாலும் விட்டுவிட வேணும்" என்று இரங்கிக் கேட்டுக்கொள்ள நாயனரோ, 'இக்குழந்தை அன்ன முண்ணவில்லையாயினும் அந்த அன்ன முண்ட தாய்ப்பாலுண்டதால் அதுவும் சிவபராதியே யாதலால் கொல்லத்தக்கதாம்' என்று மேலே எடுத்தெறிந்து வாளால் இரு துண்டாய்விழ ஏற்பாராயினர்.

அந்நிலையிலே சிவபெருமான் உமாதேவியுடன் ரிஷபவாகனத்தில் காட்சி தந்தருளி, "உனது

கைவாளால் கொலையுண்ட புண்ணியத்தால் அத்தனை பேர்களும் சிவவபராதம் நீங்கப்பெற்று தேவலோகம் அடைந்தனர். நீ நமது திருவடியை யடைவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். கோட்புலி நாயனரும் கூப்பிய கையோடு திருவடியைச் சேர்ந்தார்.

குலவு புகழ் நாட்டியத்தான் குடிவேளாளர்
கோட்புலியார், குவித்துயர்த்த செங்நெல்கூடு
நிலவணிவார்க் கமைந்தானை நிறுத்தியொன்னர்
நேர்மலைவார், திருவாணை நினையாதேநெற்
சிலமிடியா லழித்தபடியறிந்து, வாளாற்
சேர்ந்தபெருங்கிளை ஒருடல் சிதறவீசி
யிலகுமொரு குழவியையு மெறிந்து, நாத
ணெண்ணறிய கருணைநிழல் எய்தினரே

— பெரியபுராண சாரம்—பக்கம் 51. செ. 62.

## ஸ்தலபுராண வரலாறு

சுவாமி ரெத்தினபுரீசர் எனப் பெயர் பெற்றது. ரெத்தினேந்திர சோழ மகாராஜாவும் அவர் தம்பியும் தந்தையார் தமக்கு வைத்த ரெத்தினங்களை மதிப்பிட்டுப் பிரித்துக்கொள்வதற்கு, ரெத்தினப் பரீக்ஷையாளர் பலர் மதிப்பிட்டும் ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளாமல் இத்தலத்துக்குவர சுவாமியே ரெத்தின வியாபாரியாக வந்து ரெத்தினங்களை மதிப்பிட்டுப் பாகம் செய்து ராஜ்யத்தையும் பாகித்து கொடுத்து மறைந்தருளினர். வந்தவர் சிவபெருமானே யென்றுணர்ந்த ராஜாக்களிருவரும் பணிந்து போற்றி பல திருப்பணி செய்து சுவாமிக்குப் பல ரெத்தினபரணம் சாத்தி அம்மனுக்கும் பல ரெத்தினபரணங்கள் செய்து சாத்தி வழிபட்டனர்.

திருச்சிற்றம்பலம்

# திருநாட்டியத்தான்குடி - தேவாரம்

## சுந்தர மூர்த்தி நாயனர்.

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூணணவதோர் அரவங் கண்டஞ்சேன் புறங்காட்டாடல்
கண்டிகழேன்
பேணீராகிலும் பெருமையையுணர்வேன் பிறவேனுகிலும்
மறவேன்.
காணீராகிலும் காண்பனென் மனத்தால் கருதீராகிலுங் கருதி
நானேலும்மடி பாடுதலொழியேனுட்டியத்தான்குடி நம்பி... (1)

கச்சேர் பாம்பொன்று கட்டி காட்டெல்லியிலாடலைக் கவர்வன்
துச்சேனென் மனம் புகுந்திருக்கின்றமை சொல்லாய் .
திப்பியமூர்த்தி
வைச்சேயிடர்களைக் களைந்திடவல்ல மணியே மாணிக்க
வண்ண
நச்சேனெருவரை நானுமையல்லா னுட்டியத்தான்குடி
நம்பி... (2)

அஞ்சாதே யுமக்காட்செய வல்லேனியாதினுக்காசைப்படுகேன்
பஞ்சேர்மெல்லடி மாமலை மங்கைபங்கா வெம்பரமேட்டீ
மஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த மணியே மாணிக்க
வண்ண
நஞ்சேர் கண்டா வெண்டலையேந்தீ நாட்டியத்தான்குடி
நம்பி... (3)

கல்லேனல்லேனின் புகழடிமை கல்லாதே பலகற்றேன்
நில்லேனல்லேனின் வழி நின்றார்தம்முடை நீதியை நினைய
வல்லேனல்லேன் பொன்னடி பரவமாட்டேன் மறுமையை
நினைய
நல்லேனல்லே னுமக்கல்லா னுட்டியத்தான்குடி நம்பி... (4)

மட்டார் பூங்குழன் மலைமகள் கணவனைக் கருதாதார்தமைக்
கருதேன்
ஒட்டீராகிலு மொட்டுவனடியேனும் மடியடைந்தவர்க் கடிமைப்
பட்டேனுகிலும் பாடுதலொழியேன் பாடியு நாடியுமறிய
நட்டேனுதலானுன் மறக்கில்லே னுட்டியத்தான்குடி நம்பி...(5)

படப்பாற்றன்மையினு பட்டதெல்லாம் படுத்தாயென்றல்லல்
பறையேன்
குடப்பாச்சில்லுறை கோக்குளிர்வானே கோனே
கூற்றுதைத்தானே
மடப்பாற்றியரொடு, நெய்மகிழ்ந்தாடு மறையோதீ,
மங்கைபங்கா
நடப்பீராகிலும் நடப்பனும் மடிக்கே நாட்டியத்தான்குடி
நம்பீ... (6)

ஐவாயரவினை மதியுடன் வைத்த வழகா வமரர் கடலைவா
எய்வான் வைத்ததொரு இலக்கினை யணைதர நினைந்தே
னுள்ளமுள்ளளவும்
உய்வானெண்ணி வந்தும்மடி யடைந்தேனுக வீராகிலு
முகப்பன்
நைவானன்று மக்காட்பட்டதடியே னுட்டியத்தான் குடி
நம்பீ... (7)

கலியேன் மாநுட வாழ்க்கை யொன்ருகக் கருதிடிற்
கண்கணீர்பில்கும்
பலிதேர்ந்துண்பதோர் பண்புகண் டிகழேன் பசுவே
யேறுலும் பழியேன்
வலியேயாகிலும் வணங்குதலொழியோன் மாட்டேன்
மறுமையை நினையேன்
நலியேனெருவரை நானுமையல்லா னுட்டியத்தான் குடி
நம்பீ... (8)

குண்டாடிச் சமண் சாக்கியப்பேய்கள் கொண்டாராகிலுங்
கொள்ளக்
கண்டாலும் கருதேனெருதேறுங் கண்ணு நின்னலதறியேன்

தொண்டாடித் தொழுவார் தொழக்கண்டு தொழுதேனென்
வினையோக
நண்டாடும் வயற்றண்டலை வேலி நாட்டியத்தான்குடி
நம்பீ... (9)

கூடாமன்னரை கூட்டத்துவென்ற கொடிறன் கோட்புலி
சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத்தான்குடி நம்பியை நாளுமறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடியப் பன்னிருவாரூரன் உரைத்த
பாடலாகிலும் பாடுமின் றொண்டீர் பாடறும் பாவம்
பற்றறுமே.... (10)

(திருச்சிற்றம்பலம்.)

**உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா. 185 நல்லவர்சேர்**

நாட்டியத்தான்குடி வாழ் ரத்னகிரி நாதா நற்
றேட்டு மலர் மங்கை துணைவனே.

**நடைபெறும் உத்சவங்களாவன**

ஆடி மாதம் — நடவு உத்சவம்

தை மாதம் — பூச நட்சத்திரத்தில் வெள்ளையாற்
றில் தீர்த்தம் தொடுத்தல்.

1361-ம் பசலி வரவு செலவு விபரம்
(தணிக்கை செய்யப்பட்டது)

வரவு

**நில விபரம்**

| | ஏ. செ. | | க. ம. ப. | ரூ. அ.ப. |
|---|---|---|---|---|
| நஞ்சை | 47—38 | .... | நெல் 647—0—0 | |
| புஞ்சை | 4— 7 | .... | ரொக்கம் .... .... | 150—0—0 |
| | | | கட்டிட வாடகை<br>மனைப் பகுதி .... | 97—0—0 |
| | | | மோகினி .... .... .... | 12-12—0 |

## செலவு

| | | |
|---|---|---|
| வருஷம் 1க்கு நித்யபடி பூஜைசெலவு | ரூ | 1371—9—0 |
| ,, ,, சம்பளச் செலவு | ரூ | 1347—9—0 |
| ,, ,, உத்சவம் | ரூ | 636—7—6 |

தொகுத்தெழுதியவன்
ப. இராமநாத பிள்ளை
தமிழாசிரியர்
மன்னார்குடி

A. A. Venkatachalam,
Interim Executive Officer
Sri Rathapureeswarar temple
Tirunattiyathangudi

## திருநாட்டியத்தான்குடி ஸ்ரீ ரெத்தினபுரீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

### வருடம் 1-க்கு வருமானம் வரக்கூடியது உத்தேசம்

| | | | |
|---|---|---|---|
| 1 | வருஷம் 1க்கு நஞ்சை நிலம் குத்தகை கூடுதல் | ரூ | 5600—0—0 |
| 2 | புஞ்சை தென்னை குத்தகை வருமானம் | ரூ | 32—0—0 |
| 3 | கட்டட வாடகை | ரூ | 75—0—0 |
| 4 | மனைப்பகுதி வாடகை | ரூ | 16—0—0 |
| 5 | பாசி குத்தகை | ரூ | 35—0—0 |
| 6 | மோகினி | ரூ | 12-12—0 |
| 7 | வட்டி வருமானம் | ரூ | 15—0—0 |
| | | ரூ | 5785-12—0 |

97305

சௌத் இந்தியா பிரஸ்,
காரைக்குடி.